சிவமயம்.

# ஆசாரக்கோவை.

மதுரையில்
சங்கமருவியசான்றோரிலொருவராகிய
கயத்தூர்
பெருவாயின்முள்ளியாசிரியராலியற்றிய
மூலமும்,
நச்சினார்க்கினியாராற்செய்த
பொழிப்புரையும்,

இவை
திருக்குருகூர்
ஸ்ரீமத்-ஞானசித்தசுவாமிகளின்கட்டளையின்படி
உறையூர்
மதுரைநாயகமுதலியாரவர்கள்
குமாரர்
சொக்கலிங்கமுதலியாரவர்களால்,
பார்வையிடப்பட்டு
கருவூரைச்சார்ந்த
வாங்கல்மிராசு
முத்துக்குமாரபிள்ளையவர்களது
வேண்டுகோளின்படி
திருப்பரங்குன்றம்
அருணாசலசரணர்
குமாரர்
நாராயணசரணரால்

தஞ்சாவூர்
ஸ்ரீ கிருஷ்ணவிலாச அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது
இதன் விலை அணா ௨.

1899

4488a

0,1B III
e9

சிவமயம்.

# நூலாசிரியர் சரித்திரமும் ஆசாரக் கோவை என்னும் நூற்பயனும்.

இந்நூலாசிரியர் மதுரையிற் சங்கமருவிய சான்றோரில் ஒருவராகிய பெருவாயின் முள்ளியார். இவரது நாமமுதலியவற்றை உண்மையாய்த் துணிந்தறியத்தகுந்த ஆதாரங்கள் கிடைப்பது அருமையாயிருப்பினும், இந் நூலின் தற்சிறப்புப்பாயிரத்தில், "கயத்தூர்ப்பெருவாயின் முள்ளியென்பான்", எனக்கூறப் பட்டிருத்தலால், இவரது ஊர் கயத்தூர் என்பது, பெயர் முள்ளியார் என்பதும் விளங்குகின்றது. கயத்தூர் என்பது சோழநாட்டைச் சார்ந்த நன்னிலம் என்னும் ஊருக்கு அருகிலிருப்பதாகத் தெரியவருகின்றது. "ஆரெயின் மூன்று மழித் தானடியேத்தி" என்று இவர் தற்சிறப்புப்பாயிரத்தில் தெய்வவணக்கம் கூறினமையால் இவரது சமயம் சைவம் என்று விளங்குகின்றது. இந்நூல் சங்கமருவிய நூல்களாகிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலியவற்றோடு ஒருங்கெண்ணப்பட்ட * பதினெண்கீழ்க்கணக்கில் சேர்ந்ததாய், மதுரைக்கடைச்சங்கப் புலவர்களால் நன்குமதித்து ஏற்றுக்கொள்ளப்பட்ட தொன்றாதலாலும், இந்நூலினின்றும் "அரசன் உவாத்தியான்" என்ற செய்யுள் சிறுபஞ்சமூலம் "வைகறையாமம்" என்ற செய்யுள் மதுரைக்காஞ்சியிலும் ஆசிரியர் நச்சினார்க்கினியார் எடுத்தாண்டமையாலும், இந்நூல் அவரிருந்த காலத்துக்கு முற்பட்டதென்று புலப்படுகின்றது. இந்த ஆதாரத்தைக்கொண்டு இவரிருந்த காலம் ஆயிரத்தைஞ்ஞூறு வருடங்களுக்கு முற்பட்டதென்று விளங்குகின்றது. இவர்காலத்தில் இருந்த புலவர்கள் திருவள்ளுவமாலையில் உள்ள நக்கீரர் முதலிய நாற்பத்தொன்பதின்மரோயாம். ஆயின் இப்படிப்பட்ட சிறந்த நூலை இயற்றின இவர் மேற்சொல்லப்பட்ட நாற்பத்தொன்பதின்மருள் ஒருவரொன்று அறியக்கூடாமையால் இவர் அவர்களிருந்த சங்கத்தில் இருந்தவர் அல்லர் என்று தோன்றுமாயினும், அக்காலத்தில் தமிழ் ஆராய்ச்சியில் வல்லவராய் நூலியற்றினோர் அந்த நாற்பத்தொன்பதின் மரேயன்றிவேறு பலபுலவர்களும் நூல்களை இயற்றி அந்தச்சங்கத்தார் முன்னிலையில் அரங்கேற்றினதாகத் தெரியவருகின்றமையால் இந்நூலாசிரியரும் அந்தச் சங்கத்தாரொழிந்த வேறு பலபுலவருள் ஒருவராயிருக்கலாம். இந்நூலிற் கூறப்படுவனவாகிய பொருள்கள் யாவையெனின்? உண்ணல், உடுத்தல், உறங்கல், நீராடல் முதலிய நித்திய கருமம் நடத்தும் வழியும், அரசன், தந்தைதாய், மூத்தோர், தலைவர், போதகாசிரியன் முதலிய பெரி

## நூற்பயன்.

யோரிடத்தில் ஒழுகவேண்டிய ஒழுக்கமும், இல்லறத்தை ஒழுங்காக நடத்தும் விதமுதலிய விதியும், புலை, கொலை, கள்வு, பொய் சொல்லுதல், தீமைசெய்தல், சிற்றினம், முதலியவற்றைக் கடிதலாகிய விலக்கும் ஆகிய பலவகை நீதிகளேயாம். இந்த விதிவிலக்குகளோடு கூடிய நீதிகளைக் கடைப்பிடித்தொழுகுதலால் உண்டாகும் பயன் என்னையெனின்? சரீர ஆரோக்கியம், செல்வம், புகழ் முதலியவற்றால் வரும் இம்மையின்பமும், அரமகளிர், சுகாநுபவம் முதலிய மறுமையின்பமுமேயாம். இந்நூலிற் கூறப்பட்ட நீதிகள் மநுநூல், திருக்குறள், நாலடியார், முதலிய நூல்களிற் சொல்லப்பட்ட நீதிகளை பெரும்பாலும் ஒத்திருப்பதனாலும், நல்லொழுக்கத்தைச் சிறப்புவகையால் உணர்த்துகின்றதனாலும், இவற்றுள் சில நீதிகள் இக்காலத்தில் பெரும்பயன்தராவாயினும் இந்நூல் சங்கத்தாரால் நன்குமதிக்கப்பட்ட செந்தமிழ் நூலாதலாலும், அநேக வருடங்களுக்குமுன்பு நமது தேசத்திலிருந்த ஆசாரம் இப்படிப்பட்டதென்று அறிந்து கொள்வதற்கேற்ற கருவியாயிருத்தலாலும், பத்துப்பாட்டு முதலிய அரியநூல்களுக்கு உரையிட்ட சிறந்த புலவர்களால் மேற்கோளாகக் கொள்ளப்பட்டதனாலும், இம்மையின்பத்தைத்தரும் சில யுக்தி விஷேஷங்களையும், உடம்புக்கு இதத்தைச்செய்கின்ற நெறியையும் நன்கு விளக்குவதனாலும் எல்லாராலும் விரும்பத் தகுந்தனவே யென்பதற்கு ஐயமின்று (இப்புத்தகத்தின் ஊதியம்) திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி கோவிலில் ஷையூர் இராமலிங்க சரணரவர்களால் நடத்திவரும் கமலபாத்திரக் கட்டளைக்கு உபயோகிக்கப்பட்டது.

* நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி—மாமூல
மின்னிலை சொல்காஞ்சியுட னேலாதியென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு.

| | |
|---|---|
| நாலடியார். | திணைமாலை நூற்றைம்பது |
| நான்மணிக்கடிகை. | திருக்குறள். |
| இன்னாநாற்பது. | ம. |
| இனியவைநாற்பது. | ஆசாரக்கோவை. |
| கார் நாற்பது. | பழமொழி. |
| களவழி நாற்பது. | சிறுபஞ்சமூலம். |
| ஐந்திணையைம்பது. | முதுமொழிக்காஞ்சி. |
| ஐந்திணை யெழுபது. | ஏலாதி. |
| திணைமொழியைம்பது | கைந்நிலை. |

இத்துடன் அச்சிடப்படும் புத்தகம் திருவானைக்காப் புராணமும் திருவிடைமருதூர் உலாவும்.

# ஆசாரக்கோவை

ஆசாரம்என்பது ஒழுக்கம்-அதாவது-அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரம சரிய முதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற்கு ஓதிய அறங்களின் வழுவாது ஒழுகுதல்-கோவை, கோத்தமாலை.

## தற்சிறப்புப்பாயிரம்.

ஆரெயின் மூன்று மழித்தானடியேத்தி
யாரிடத்துத்தா னறிந்தமாத்திரை யானாசாரம்
யாருமறியவறனாயமற்றவற்றை
யாசாரக்கோவையெனத்தொகுத்தான் றீராத்
திருவாயிலாயதிறல்வண்கயத்தூர்ப் *
பெருவாயின்முள்ளியென்பான.

(இ-ள்.) பகைவரால் அழித்தற்கரிய மும்மதில்களையும் நகைத்து அழித்தவனாகிய சிவபெருமானது திருவடியைத்துதித்து இருடிகளாற் செய்யப்பட்டநூல்களில் தான் அறிந்த அளவினால் ஆசாரத்தையாவருமுணர்ந்தொழுக தருமமாகிய அந்த ஆசாரத்தினியல்புகளை ஆசாரக்கோவையென்று சொல்லும்படி திரட்டினான் அவன்யாவன் எனின்திருமகளுக்கு நீங்காதவாயிலாகிய வலியமைந்த* வண்கயத்தூர் வாழ்பவனாகிய பெருவாயின் முள்ளியென்பவன். (எ-று.) * வெண்கயத்தூர் என்றும் பாடம்.

## நூல்.

நன்றியறிதல்பொறையுடைமையின்சொலோ
டின்னாதவெவ்வுயிர்க்குஞ்செய்யாமைகல்வியோ
டொப்புரவாற்றவறிதலறிவுடைமை
நல்லினத்தாரோடுநட்டலிவையெட்டுஞ்
சொல்லியவாசாரவித்து.

(இ-ள்.) தனக்குப்பிறர் செய்தநன்மையை அறிதலும் தனக்குப் பிறர் செய்ததீமையைப் பொறுத்தலும் இன்சொல்லும் எல்லாவுயிர்களுக்கும் துன்பம் செய்யாமையும் கல்வியும் ஒப்புரவைமிக அறிதலும் அறிவுடைமையும் நல்லினத்தாரோடு நட்டலும் ஆகிய இவ்வெட்டுவகையும் மேலோரால்சொல்லப்பட்ட ஆசாரங்களுக்குக்காரணமாம். (எ-று.) (க)

பிறப்புநெடுவாழ்க்கைசெல்வம்வனப்பு
நிலக்கிழமைமீக்கூற்றங்கல்விநோயின்மை
யிலக்கணத்தாலிவ்வெட்டுமெய்துபவென்று
மொழுக்கம்பிழையாதவர்.

(இ-ள்.) எந்நாளும் ஆசாரத்தில் தவறாதவர்கள் நற்குடியிற் பிறத்தல் நீர்க்காயுள் செல்வமுடைமை அழகுடைமை நிலவுரிமை சொற்செலவு கல்வி பிணியின்மை இந்த எட்டையும் அவற்றின் இலக்கணத்துடன அடைவார்கள் என்பதாம் எ-று. (உ)

தக்கிணைவேள்விதவங்கல்வியிந்நான்கு
முப்பாலொழுக்கினாற்காத்துய்க்கவுய்யாக்கா
லெப்பாலுமாகாகெடும்.

(இ-ள்.) பெரியோருக்கு தக்ஷிணைகொடுத்தலும் யாகஞ்செய்தலும் தவம்செய்தலும் கல்வியும் ஆகிய இந்தநான்கினையும் மூவகையாகிய விதியினால் ஒருவன் பாதுபாத்து நடத்துக நடத்தாவிடத்து எவ்வுலகத்திலும் தனக்குப் பயன்தராதனவாகி இந்நான்கும்கெடும், எ-று. முப்பால், என்பது அறப்பால், பொருட்பால் இன்பப்பால் (ங)

வைகறையாமந்துயிலெழுந்துதான்செய்யு
நல்லறமுமொண்பொருளுஞ்சிந்தித்துவாய்வதிற்
றந்தையுந்தாயுந்தொழுதெழுகவென்பதே
முந்தையோர்கண்டமுறை.

(இ-ள்.) வைகறையாகியபின் யாமத்தில் நித்திரைவிட்டெழுந்து தான் செய்யவேண்டிய நல்லதருமத்தையும் அழகாகியபொருள் வருவாயாகிய காரியத்தையும் மனதில் ஆலோசித்து தந்தையையும் தாயையும் வணங்கி வாய்ப்பானகாரியத்தில் முயலுக என்று சொல்லப்படுவதே முன்னோர் சொல்லிய முறைமையாம் எ-று. (ச)

எச்சிலார்தீண்டார்பசுப்பார்ப்பார்தீத்தேவ
ருச்சந்தலையோடிவையென்பயாவருந்
திட்பததாறநீண்டாப்பொருள்.

(இ-ள்.) பசுவும் பார்ப்பாரும் நெருப்பும் தேவர்களும் உச்சந்தலையுமாகிய இவைகள் எல்லாரும் எச்சிலோடுகூடிய சம்பந்தத்தால் தீண்டப்படாத பொருள்கள் என்றுசொல்லுவர் அறிவுடையோர் ஆதலால் எச்சிலையுடையராய் பசு முதலியவற்றை ஒருவருந்தீண்டார் (எ-று.) திட்பம், எச்சில். (ரு)

எச்சிலார்நோக்கார்புலைதிங்கணாய்நாயி
றத்தகவீழ்மீனொடிவ்வைந்துந்தெற்றென
நன்கறிவாரநாளும்விரைந்து.

(இ-ள்.) அறிவுதெளிவாக நூல்களிற்சொல்லப்படும் நற்பொருளையறி பவர் புலையும் சந்திரனும் நாயும் சூரியனும் அந்தத்தகுதியாகிய வீழ்மீனும் என்கின்ற இந்த ஐந்தினையும் எந்நாளும் அவசரப்பட்டு எச்சிலுடையவராய் பார்க்கமாட்டார்களென்பதாம் எ-று. வீழ்மீன்? எரி நட்சத்திரம். (௬)

நாளந்திக்கோறின்றுகண்கழீஇத்தெய்வத்தைத்
தானறியுமாற்றாற்றொழுதெழுகவல்லந்தி
நின்றுதொழுதல்பழி.

(இ-ள்.) சிறுகாலையில் கோல்கடித்துப் பல்விளக்கிக் கண்களைக்கழுவி கடவுளைத்தான் அறிந்தவழியால் வணங்கிபின்பு ஒருகருமத்தில் முயலுக மாலைப்பொழுதில் தான்வணங்குந் தெய்வத்தை நின்றுவணங்குதல் குற்ற மாம் ஆதலால் இருந்து தொழவேண்டும் என்பதாம் எ-று. (௭)

உடுத்தலானீராடாரொன்றுடுத்துண்ணா
ருடுத்தாடைநீருட்பிழியார்விழுத்தக்கா
ரொன்றுடுத்தென்றுமவைபுகாரென்பதே
முந்தையோர்கண்டமுறை.

(இ-ள்.) மேன்மைபொருந்திய அறிஞர் ஆடையுடுத்தலலது நீராடமாட் டார் ஒற்றை ஆடையையுடுத்துப்புசியார் தாம்உடுத்த ஆடையை நீரின்கண் பிழியமாட்டார் எந்நாளும் ஒற்றை ஆடையையுடுத்து சபையிற்புகமாட்டார் என்று சொல்லப்படுவது முன்னோர் சொல்லிய நூற்றுணிபுகள் என்பதாம் எ-று. (௮)

நீருணிழற்புரிந்துநோக்கார்நிலமிராக்
கீறாரிராமரமுஞ்சேராரிடரெனினு
✓ நீர்த்தொடாதெண்ணெயுரையாருரைத்தபி
னீர்த்தொடார்நோக்கார்புலை.

(இ-ள்.) நீரில் தமதுசாயையை விரும்பிப்பாரார் இருந்து நிலத்தைக் கீறார் இராப்பொழுதில் ஒருமரத்தையும் அணுகார் பிணியால்த் துன்பமாயி ✓னும் நீரைத்தொடாமல் எண்ணெய் உடம்பிற்றேய்த்துக்கொள்ளார் தேய்த் துக்கொண்டபிறகு தம்உடம்பின்மீது நீர்தெளித்துக்கொள்ளாமல் புலையினைப் பார்க்கமாட்டார் அறிவுடையோர் என்பதாம் எ-று. (௯)

நீராடும்போழ்தினெறிப்பட்டாரொன்று
நீந்தாருமியார்திளையார்விளையாடார்
காய்ந்ததெனினுந்தலையொழிந்தாடாரே
யாய்ந்தவறிவினவர்.

(இ-ள்.) நன்னெறிக்கண் தங்கினவராய் நூல்களையாராய்ந்த அறிவினை யுடையோர் எந்நாளும் நீராடுங்காலத்தில் அந்த நீரில்நீந்தமாட்டார் உமியமாட் டார் நீரைக்குடைந்து திளைக்கமாட்டார் விளையாடமாட்டார் எண்ணெய்பெறு துதலைகாய்ந்ததாயினும் தலையொழிய நீராடமாட்டார் என்பதாம் எ-று. (௰)

ஐம்பூதம்பார்ப்பார்பசுத்திங்களுயிறு
தம்பூதமென்னுறிகழ்வானேற்றன்மெய்க்க
ணைம்பூதமன்றேகெடும்.

(இ-ள்.) பஞ்சபூதங்களையும் பார்ப்பானையும் பசுக்களையும் சந்திரனை யும் சூரியனையும் தன்னிலும் பரிசுத்தமானவைகளென்று கருதாமல் ஒருவன் இகழ்வானாயின் தன்உடம்பிலுள்ள பஞ்சபூதங்களும் இகழ்ந்த அன்றே அழி தொழியும் என்பதாம் எ-று. ൰ (மக

அரசனுவாத்தியான்றாய்தந்தைதம்மு
னிகரில்குரவரிவரிவரைத்
தேவரைப்போலத்தொழுதெழுகவென்பதே
யாவருங்கண்டநெறி.

(இ-ள்) அரசனும் உவாத்தியாயனும் தாயும் தந்தையும் தமையனும் ஆகிய இவர்கள் ஒப்பில்லாத குரவர்களாவார்கள் இவர்களை தேவரைத்தொழு தெழுவதுபோல தொழுதெழுகவென்பதே நல்லோர் எல்லாரும் சொல்லிய நெறியாம் எ-று. (மஉ)

குரவருரையிகந்துசெயயார்விரதங்
குறையுடையார்தீரமறவார்நிறையுவா
மெல்கோலுங்தின்னார்மரங்குறையாரெனபதே
நலலறிவாளர்துணிவு.

(இ-ள்) புத்திமான்கள் மேற்கூறப்பட்ட குரவர்சொல்லைக்கடந்து ஒரு காரியத்தையும் செய்யமாட்டார் முடியாதுகிடந்த குறைவிரதமுடையார் மிக வும் அதனைமறந்தொழிகமாட்டார் சந்திரன் நிறைந்த உவாவின்கண் மெல்லு தற்குரிய கொம்பையும் மெல்லார் பல்லைத்துடைப்பதும் செய்யார் அந்த உவா வின்கண் மரங்களையும் குறைக்கமாட்டார் என்றுசொல்லப்படுவதே நல்லறி வுடையோரதுநிச்சயம் எ-று. (மங

நீராடிக்காலகழுவிவாய்பூசிமண்டலஞ்செய்
துண்டாரேயுண்டாரெனப்படுவாரல்லாதா
ருண்டார்போல்வாய்பூசிச்செல்வரதுவெடுத்துக்
கொண்டாரரக்கர்குறித்து.

(இ-ள்.) குளித்துக்காலைக் கழுவி வாயைப்பூசி உண்ணுமிடத்தை மண் டலஞ்செய்துபின்பு உணவையுண்டவரோ உண்டாரென்று சொல்லப்படுவார் இப்படிச்செய்யாமல் உண்டவர் விதிப்படி உண்பவரைப்போல வாய்கழுவிப் போகின்றவருணவை அரக்கரானவர் குறித்து எடுத்துக்கொள்வார் என்பதாம் எ-று. (மச

காலினீர்நீங்காமையுண்டிடுகபள்ளியு
மீரம்புலராமையேறற்கவென்பதே
பேரறிவாளர்துணிவு.

(இ-ள்.) கழுவின நீர் காலினின்று நீங்குமுன்னரே உண்ணத்தொடங்குக பாயலின் கண்ணும் கால் கழுவின ஈரம்புலராமல் ஏறுதொழிக என்று சொல்லப்படுவதே பேரறிவினையுடையவரது துணிவாம் எ-று. (௰௫)

உண்ணுங்காலைநோக்குந்திசைகிழக்குக்கண்ணமர்ந்து
தூங்கான்றுளங்காமைநன்கிரீஇயாண்டும்
பிறிதியாதுநோக்கானுரையான்றொழுதுகொண்

(இ-ள்.) உண்ணும்போது நோக்குதற்குரிய திசை கீழ்த்திசையாகும், அவ்வாறு கீழ்த்திசைநோக்கியிருப்பினும் கண்ணமர்ந்து தூங்காதவனாய் புடைபெயராமல் திரமாயிருந்து எவ்விடத்தும் பிறிதொன்றைச் சிறிதும் நோக்காதவனாய் பேசாதவனாய் உண்ணுகின்ற உணவை வணங்கி கையாலெடுத்து சிந்தாமல் நன்றாயுண்க, எ-று. (௰௬)

விருந்தினர்மூத்தோர்பசுசிறைபிள்ளை
யிவர்ககூண்கொடுத்தல்லாலுண்ணாரேயென்று
மொழுக்கம்பிழையாதவா.

(இ-ள்.) எக்காலத்தும் ஒழுக்கத்தில்த் தவறாதவர்கள் விருந்தினரும் மிக மூத்தோரும் பசுக்களும் சிறைபட்டவர்களும் பிள்ளைகளும் ஆகிய இவர்களுக்கு உணவுகொடுத்தல்லது தாம் உண்ணமாட்டார், எ-று. (௰௭)

ஒழிந்ததிசையும்வழிமுறையானல்ல
முகட்டுவழியூண்புகழ்ந்தாரிகழ்ந்தார்
முகட்டுவழிகட்டிற்பாடு.

(இ-ள்.) முன் சொன்ன கிழக்கு முகமாய் [illegible]ந்துண்ணத்தடைநேரிட்டநெறிமுறையில் அந்தக் கீழ்த்திசை ஒழிந்த மற்[illegible]த்திசைகளும் விருந்துண்ணுதலுக்கு நன்மையுடையனவாம். வாயிலினேரே யிருந்து உண்ணுதலை நன்றென்று அறிஞர் புகழ்ந்தார்கள் முகட்டின் நேராக கட்டிலிட்டு அதிற்படுத்தலை நன்மையன்றென்று இகழ்ந்தார்கள் என்பதாம், எ-று. (௰௮)

கிடந்துண்ணார்நின்றுண்ணார்வெள்ளிடையுமுண்ணார்
சிறந்துமிகவுண்ணார்கட்டின்மேலுண்ணா
ரிறங்கொன் றுந்தின்னற்கநின்று.

(இ-ள்.) படுத்துண்ணலாகாது நின்றுண்ணலாகாது வெளியிடத்திருந்தும் உண்ணலாகாது விரும்பி மிக உண்ணலாகாது நெறியைக்கடந்து மிக ஒன்றையும் நின்று தின்னலாகாது, எ-று. (௰௯)

முன்றுவ்வார்முன்னெழார்மீக்கூறுருணின்க
ணென்பெறினுமாற்றவலமிரார்தமமிர
பெரியார்கிரவிருந்தக்கால்.

(இ-ள்.) தம்மினும் பெரியோரது பந்தியில் இருந்தால் அப்பெரியோர் உண்பதற்கு முன்னே தாம் உண்ணார் அவாகளு முன்னே எழுந்திரார் சொற் செலவு செய்யார் என்பதாம், எ-று. (உ௰)

கைப்பனவெல்லாங்கடை தித்திப்ப
மெச்சும்வகையாலொழிந்தவிடையாகத்
துய்க்கமுறைவகையாலூண்.

(இ-ள்.) கைக்கும் கறியெல்லாம் முடிவின் கண்ணாகவும் தித்திக்கும் கறியெல்லாம் முதலாகவும் ஒழிந்த சுவையுள்ள கறிகளெல்லாம் இடையாகவும் புகழும் வகையினாலும் முறையின் வழியினாலும் உணவையுண்க, எ-று. கைப்பு, என்பது கசப்பு (உ௰க)

முதியவரைப்பக்கத்துவையார்விதிமுறையா
லுணபவற்றுளெல்லாஞ்சிறியகடைப்பிடித்
தன்பிற்பிரியாமையாசாரநீங்காமை
பண்பினுணிக்கலகலம.

(இ-ள்) தம்மினும் மூத்தாரை உண்ணும்பொழுது தம்பக்கத்து வைத்துணணார் சாத்திரவிதியின் முறைமையால் உண்ணுங்கலங்கள் எல்லாவற்றுள்ளும் சிறிய கலங்களை உறுதியாய்ப் பிடித்துக்கைக்கொண்டு அன்பில் பிழையாத வகையும் ஒழுக்கத்தில் நீங்காத வகையும் உண்டமைந்தால் உள்ள கலங்களை முறையாக நீக்குக என்பதாம், எ-று. (உஉ)

இழியாமைநன்குமிழ்ந்தெச்சிலறவா
யடியோடுநன்குதுடைத்துவடிவுடைத்தா
முக்காற்குடிததுத்துடைத்துமுகத்துறுப்
பொருந்தவகையால்விரலூறுத்திவாய்ப்பூசன்
மிக்கவாகண்டநெறி.

(இ-ள்.) வாயிற் கொண்ட நீர் உள்ளே புகாமல் நன்றாய் உமிழ்ந்து உண்ட எச்சில் போகும்படி வாயை வாயின் அடியோடு நன்றாகத்துடைத்து அழகுடைத்தாக மூன்று தரம் நீர் குடித்துத் துடைத்து முகத்திலுள்ள அவயவங்களை அவற்றிற்குப் பொருந்தும விதத்தால் விரல்களாற் பரிசித்து வாய்கழுவுதல் வாய்பூசும் வழியிற் சிறந்தவர் சொல்லிய நெறியாம், எ-று. (உ௩)

இருகையாற்றண்ணீர்பருகாரொருகையாற்
கொள்ளார்கொடாஅர்குரவர்க்கிருகை
சொறியாருடம்புமடுத்து.

இ-ள்.) இரண்டு கைகளாலும் முகந்தும் ஏற்றும் தண்ணீர் குடியார் குரவர் கொடுப்பவற்றை ஒரு கையால் வாங்கிக்கொள்ளார் அவர்க்குத் தாம் ஒரு கையால் கொடார் உடம்பைத் தீண்டி இரண்டு கைகளாலும் சொறியார் எ-று.

அந்திப்பொழுதுகிடவார்நடவாரே
யுண்ணார்வெகுளார்விளக்கிகழார்முன்னந்தி
யல்குண்டடங்கல்வழி.

(இ-ள்.) மாலைக்காலத்தில் படுத்துக்கொள்ளார் நடத்தலும் செய்யார் ஒருவரையும் கோவியார் மாலையின் முற்பங்கின்விளக்கை இகழாது ஏற்றுவார் அந்திப்பொழுதில் உண்ணாதவராய் இரவில் உண்டு புறத்திற் போகாமல் ஓரிடத்தில் அமர்ந்திருத்தல் நன்றியாம், எ-று. (உ௰௫)

கிடக்குங்காற்கைகூப்பித்தெய்வந்தொழுது
வடக்கொடுகோணந்தலைச்செய்யார்மீக்கோ
ளுடற்கொடுத்துச்சேர்தல்வழி.

(இ-ள்.) படுக்கும்பொழுது தெய்வத்தைக் கைகுவித்துத்தொழுது வடதிசையிலும் மூலைக்கிசையிலும் தலைவைக்காமல் மேற்போர்வை யொன்றை உடம்பின் கண மகாயதது கிடத்தல் நன்னெறி யெனபதாம, எ-று. (உ௰௬)

இருதேவர்பார்ப்பாரிடைபோகார்தும்மினு
மிக்கார்வழுத்திற்றொழுதெழுகவொப்பார்க
குடன்செல்லலுள்ளமுவந்து.

(இ-ள்.) இருதேவர் நடுவிலும் பலபார்ப்பார் நடுவிலும் ஊடறுத்துப் போகார் தும்மின பொழுதிலும் பெரியோர் வாழ்த்தினால் தொழுதுகொண்டே செல்க தம்மொடு சமானமானவர்க்கு தம்மனமகிழ்ந்து நேரே செல்க என்பதாம், எ-று. (உ௰௭)

புற்பைங்கூமாப்பிசுடலைவழிதீர்த்தந்
தேவகுலநிழலானிலைவெண்பலியென்
றீரைந்தின்கண்ணுமுமிழ்வோடிருபுலனுஞ்
சோராருணர்வுடையார்.

(இ-ள்.) புல் பயிர் கோமயம் மயானம் வழிமார்க்கம் தண்ணீர் கோவில் மரநிழல் பசு நிற்குமிடம் சாம்பல் என்று சொல்லப்பட்ட இப்பத்திடத்தும் உமிநீரோடு மூத்திர புரீடங்களையும் அறிவுடையோர் சோரவிடார் என்பதாம், எ-று. புரீடம் என்பது,மலம். (உ௰௮)

பகற்றெற்குநோக்காரிராவடக்குநோக்கார்
பகற்பெய்யார்தீயினுணீர்.

(இ-ள்.) பகற்காலத்தில் தெற்கு நோக்கியிருந்து மலசலங்கழித்தலும் இராக்காலத்தில் வடக்கு நோக்கியிருந்து கழித்தலும் பகற்காலத்தில் நெருப்பின்மேல் நீரைப்பெய்தலும் அறிவுடையோருக்கு இயலாது என்பதாம், எ-று. (உ௰௯)

நடைவரவுநீரகத்து நின்றுவாய்பூசார்
வழிநிலைநீருள்ளும்பூசார்மனத்தால்
வரைந்துகொண்டல்லதுபூசார்கலத்தினாற்
பெய்பூச்சுச்சீராதெனின்.

(இ-ள்.) ஓடுகின்ற நீரில் நின்றுகொண்டும் நடந்துகொண்டும் வாயைக் கழுவார் ஓடும் நீர் பெறு இடத்தில் நிலை நீரிலும் அவ்வாறே வாய் கழுவார் கலத்தால் சிலர் வார்க்கவாயலம்புதல் முடியாதாயின் மனத்தினால் சிலர் நீர்வார்ப்பதாகப்பாவித்துக்கொண்டு வாயலம்பவேண்டும் என்பதாம், எ-று. (௩௰)

பிறர்மனை கள்களவு சூதுகொலையோ
டறமறிந்தாரிவ்வைந்துநோக்கார் - திறனிலரென்
றெள்ளப்படுவதூஉமன்றிநிரயத்துச்
செல்வழியுய்த்திடுதலால்

(இ-ள்.) பிறர் மனைநோக்குதல் முதலியவற்றை ஒருவர்செய்தால் அவர் நற்குணமிலரென்று பலரால் இகழப்படுதலேயன்றி நரகத்தில் செல்லும்நெறி யின் கண் செலுத்துதலால் பிறர் மனையாளும் கள்ளும் களவும் சூதும் கொலை யும் ஆகிய இவ்வைந்தினையும் தரும மார்க்கத்தை யறிந்தவர் மனத்தால் நினைத் தலும் செய்யாரென்பதாம், எ-று. (௩௧)

பொய்குறளைவௌவலழுக்காறிவைநான்கு
மையந்தீர்காட்சியார்சிந்தியார்சிந்திப்பி
னையம்புகுவித்தருநிரயத்துய்த்திடுந்
தெய்வமுஞ்செற்றுவிடும்.

(இ-ள்.) பொய்யும் கோளும் பிறர் பொருளை அபகரிக்கவேண்டுமென் னும் ஆசையும் பிறர் ஆக்கத்தில் பொறாமையும் ஆகிய இந்நான்கினையும் சந்தே கம் நீங்கின அறிவினையுடையார் நினையார் நினைப்பாராயின் அவரை பிச்சைபுகு வித்து அரியநரகத்தில் செலுத்திவிடும் தெய்வமும் கெடுத்துவிடும் என்பதாம், எ-று. (௩௨)

தமக்கென்றுலையேற்றார்தம்பொருட்டின்கொள்ளா
ரடுக்கலையெச்சிற்படாஅர்மனைப்பலி
யூட்டினமைகண்டுண்க.

(இ-ள்.) தமக்கென்று உலைவையார் தெய்வத்தின் பொருட்டன்றித் தம்பொருட்டு ஒருயிரைக்கொன்று அதன் தசையைக் கொள்ளார், மடைப்பள் ளியை எச்சிலாக்கார், மனைவாழுந் தெய்வங்களுக்குப் பலியுண்பித்தமையை அறிந்து பிறகு தாம் உணவை யுண்கவேண்டும என்பதாம், எ-று. ஆதலர் முதலியோர்க்கென்று உலைவைத்தல் அறநெறியாதலால் தமக்கென்று உலை ஏற்றார்.

உயர்ந்ததின்மேலிரா ருள்ளழிவுசெய்யா
ரிறந்தின்னுசெய்தக்கடைத் தங்குரவ
ரிளங்கிளைகளுண்ணுமிடத்து.

(இ-ள்.) தமக்கு இளைய சுற்றத்தார் உண்ணுங்காலத்தில் பெரியோர் உயர்ந்த பீடத்தின் மேல் இரார் அக்கிளைகள் முறைமை கடந்து குற்றத்தை செய்தபோதும் அவர் மனம் வருந்துவனவற்றையும் செய்யார் என்பதாம், எ-று. (கச)

கண்ணெச்சிலுக்கண் ணூட்டார்காலோடுகாலுரயார
புண்ணியமாயதலையுமறுப்புறுத்த

(இ-ள்) நுட்பமாகிய நூலறிவினையுடையவர் ஒருவன் கண்ணுக்கு மருந்து ஊட்டின கோலைக்கொண்டு தம் கண்ணுக்கு மருந்தூட்டார், தமது ஒரு காலாலே மற்றொரு காலைத்தேயார், புண்ணியமாகிய பொருள்களை தலையிலும் கண்ணுமுதலிய உறுப்புகளிலும் ஏற்றிக்கொள்க என்பதாம், எ-று. (கரு)

நாழிமணைமேலிரியார் மணைகவிழார்
கோடிகடையுள்விரியார் கடைத்தலை
யோராதுகட்டிற்படா ரறியாதார்
...டல்.

(இ-ள்) நாழியை மணையின்மேல் வையார் மணையைக் கவிழ்த்துவையார், தலைவாயிலில் கோடியாடையைப் பிரித்துவிரியார். ஆராயாமல் தலைவாயிலில் கட்டிவிடப்படுக்கார் தம்மையறியாதவர்க்கெதிரில் நில்லாது ஒழிக என்பதாம், எ-று. (கசு)

துடைப்பந்துகட்டாடுபுல்லிதழ்ச்செத்தல்
கருமலையமைடபயபுமதத்தேனுடைந்தும
பரப்பற்கபந்தரகத்து.

(இ-ள்.) துடைப்பமும் துகளோடுங்கூடிய செத்தையும் பலின்ப விதழும், பழய கருங்கலங்களும் கிழிந்த கட்டிலும் ஆகிய இ மணப்பந்தலின்கீழ் பரப்பா தொழிக வென்பதாம், எ-று. (கஎ)

காட்டுக்களைந்துகலங்கழீஇயில்லத்தை
யாபபுக்மோமகுக்குதெளித்துக்குறுகாலை
நீர்ச்சால்கரகநிறையமலரணிந்
தில்லம்பொலியவடுப்பினுட்டீப்பெய்க
நல்லதுறல்வேண்டுவார்.

(இ-ள்) நல்லதாகிய செல்வத்தை அடையவிரும்புவோர் இருகாலையில் எழுந்து வீட்டிலுள்ள செத்தையைக் களைந்து கரிய கலங்களைக்கழுவி வீட்டின் எவ்விடத்திலும் பசுவின் சாணநீர் தெளித்து நீர்ச்சாலிலும் கரகத்திலும் நிறைவாகமலரைத் தரித்து வீட்டினிடத்தும் பொலியும்படி அடுப்பில் நெருப்பையுண்டாக்குக என்பதாம், எ-று. ஆ-பசு-பி-சாணம். (௩௮)

அட்டமியுமேனையவாவம்பதினான்கு,
தொப்பார்க்குறுகண்ணுமிக்க
நிலத்துளக்குவிண்ணதிர்ப்புவாலாமைபார்ப்பா
ரிலங்குநூலோதாதநாள.

(இ-ள்.) அட்டமி நாளும் பின்னும் உவாநாளும, சதுர்த்தசியும், தாமருக்கும் அந்நிலங்காக்கும் அரசர்க்கு ஆபத்துக்காலமும் மிகுதியாகிய பூகம்பநாளும் இடி முழங்கு நாளும் தாம் அசுத்தமாயிருக்கின்றநாளும் ஆகிய இந்நாட்களில் வேதியர் வேதம் ஓதாத நாட்களெனபதாம, எ-று. உவா என்பது அமாவாசையும் பௌர்ணமி என்னும் இரண்டு பொருளையும் தருகின்றசொல்-பூகம்பம்-பூமி-நடுங்குதல். (௩௯)

கல்லியாணந்தேவர்பிதிர்விழாவேள்வியென்
றைவகைநாளுமிகழாதறஞ்செய்க
பெய்கவிருந்திற்குங்கூழ்.

(இ-ள்.) தான் செய்யுங் கல்லியாண நாள் தேவர்க்குச் சிறப்புச்செய்யு நாள் பிதிரர்களுக்குச் சிறப்புச்செய்யுநாள் திருவிழாநாள் யாகஞ்செய்யும்நாள் என்று சொல்லபட்ட இவ்வைந்துநாளிலும் மறவாமல் கொடையறம் செய்க விருந்தினருக்கும் சோறிடுக என்பதாம், எ-று. (௪௰)

உடைநடைசொற்சோர்வுவைதலிந்நான்கு
நிலைமைக்குங்கல்விக்குமாண்மைக்குந்தத்தங்
குடிமைக்குந்தக்கசெயல்.

(இ-ள்.) உடையும் நடையும் சொற்சோர்வும் வைதலும் ஆகிய இந் நான்கும் தாம் அரசனால் சிறப்புப் பெற்றமைக்கும் தம்கல்விக்கும் தம்ஆண் மைக்கும் தம் குடிப்பிறப்பிற்கும் தகுதியாகச்செய்கவென்பதாம், எ-று. (௪௧)

பழியா,ரிழியார்பலருள்ளுறங்கா,
ரிசையாதநோர்ந்துகரவாரிசைவின்றி
யில்லாரையெள்ளியிகந்துரையார்தள்ளியுங்

(இ-ள்.) பிறரால் மாறுபடுதலில்லாத கேள்வியையுடையார் தமக்கு இயன்றும் பலர் நடுவிலிருந்து பிறரைப்பழித்துரையார் இகழ்ந்துரையார் பலர் நடுவிலிருந்து தூங்கார் தமக்கு இசையாத காரியங்களை பிறர்க்குச் செய்வோமென்று உடம்பட்டு செய்யாதொழியார் தகுதியில்லாமல் வறியாரை இகந்து முறைகடந்து பேசார் என்பதாம், எ-று. (௪௨)

மின்னொளியும்வீழ்மீனும்வேசையர்கள்கோலமுந்
தம்மொளிவேண்டுவார்நோக்கார்பகற்கிழவன்
முன்னொளியும்பின்னொளியுமற்று.

(இ-ள்.) தமது விளக்கத்தை விரும்புவோர் மின்னொளியையும் வீழ்மீனையும் வேசையர்கள் கோலத்தையும் நோக்கமாட்டார் சூரியனுடைய காலை ஒளியையும் மாலை ஒளியையும் அப்பெற்றியாகவே நோக்கமாட்டார் என்பதாம், எ-று.

படிறும் [illegible]
வசையுமபுறனுமுரையாமேயென்று
மசையாதவுள்ளத்தவா.

(இ-ள்.) எக்காலத்தும் தளராத மனத்தினையுடையர் வஞ்சகச்சொல்லையும் பயன்படாத சொல்லையும் வாய்க்காவாமல் வேண்டியவற்றைச்சொல்லும் சொல்லையும் பிறனை பழித்துச்சொல்லுஞ் சொல்லையும் இவைபோன்ற மற்றைச்சொல்லையும் சொல்லார் என்பதாம், எ-று. (சச)

தெறியொடுகல்லேறுவிளிவெளியே
விகிர்கங்க கங்காக் கவ்வைகைபடைதோன்ற
வுறுப்புச்செகுத்தலோடின்னவையெல்லாம்
பயிற்றார்நெறிப்பட்டவா.

(இ-ள்.) நன்னெறிப்பட்டவர் தெறித்தலும் கல்லெறிதலும் கனைத்தல் முதலியவற்றைச்செய்தலும் தூரப்போகின்றவனொருவனை அழைத்தலும் ஒருவன் செய்வகைசொல் முதலானவற்றைதானும் அவ்வகை இகழ்ந்து (செய்துகாட்டலும்) வேகமுடையனாதலும் ஒளித்தலும் கையோடுகைபுடைத்தலும் பிறர்க்குவெளிப்படகண்ணிடுதல் முதலாயினசெய்து தன் உறுப்பைச்செகுத்தலும் ஆகிய இத்தன்மையவாகிய எல்லாவற்றையும் மிகுதியாகச்செய்யார் என்பதாம், எ-று. (சரு)

முறுவலினிதுரைகானீர்மணைபாய்
கிடக்கையோடிவ்வைந்துமென்பதலைச்சென்றாக
ஊணொடுசெய்யுஞ்சிறப்பு.

(இ-ள்.) தம்மிடத்துவந்தவர்க்கு உணவோடுசெய்யவேண்டிய சிறப்புகளாவன முறுவலோடுகூடின இன்சொல்லும் கால்கழுவநீரும் இருக்கமணையும் கிடக்கப்பாயும் கிடக்கையோடுகிடக்கும் இடமும் ஆகிய இவ்வைந்துமேயாம் என்றுசொல்லுவர் பெரியோர்என்பதாம், எ-று. (சசு)

கருத்துப்பகைமுனையுங்கள்ளாட்டுக்களனு
நிரப்பமில்தீப்பெண்டிர்சேரிபுகுதல்,
குணநோக்கிக்கொண்டவர்கோள்விட்டுமியு
கிகரிலறிவினார்வேண்டார்பலர்தொகு
நீர்க்கரையுநீடுநிலை.

(இ-ள்.) ஒப்பற்ற அறிவினையுடையார் வெகுண்டபகைமுனையிலும், கள்ளுண்டு களித்தாடுமிடத்திலும், பொதுமகளிர்சேரியிலும், தம்குணங்களை ஆராய்ந்து தம்மைவிரும்பிக்கொண்டார் கோட்பாடுவிட்ட இடத்திலும் பலர்கூடும் நீர்க்கரையிலும் நெடுநேரம் நிற்கையைவிரும்பார் என்பதாம், எ-று. (சஎ)

சேரார்தீக்கூட்டார்
துளிவீழக்கால்பரப்பியோடார்தெளிவிலாக்
கானந்தமியரியங்கார்துளியஃகி
நல்குரவாற்றப்பெருகினுஞ்செய்யாரே
தொல்வரவிற்றீர்ந்ததொழில்.

(இ-ள்.) அறிவுடையோர் முதிர்ந்தபுல்லுள்ள இடத்திலும் முதிர்ந்த காட்டுள்ள இடத்திலும் சேர்ந்திருக்கமாட்டார் அவற்றை நெருப்பிட்டுக் கொளுத்தார் மழைபெய்யும்போது காலைப்பரப்பி ஓடார் வழிதுறையறியப்படாத காட்டில்தனித்துப்போகமாட்டார் மழைகுறைந்து வறுமையிருந்தாலும் பிழைக்கநடவார் என்பதாம், எ-று. (சஅ)

பாழ்மனையுந்தேவகுலனுஞ்சுடுகாடு
மூரில்வழியெழுந்தவொற்றைமுதுமரனுந்
தாமேதமியர்புகாஅர்பகல்வள்ரார
நோயின்மைவேண்டுபவர்.

(இ-ள்.) பிணியில்லாமையை விரும்புவோர் குடியில்லாத வீட்டிலும் தேவாலயங்களுள்ளும் சுடுகாட்டிலும் ஊரில்லாத இடத்துண்டாகிய தனிமையாகியபழயமரத்திலும் அறிவின்றித துணையோடல்லதுபோகார் பகலில் உறங்கார் என்பதாம், எ-று. (சக)

எழுச்சிக்கட்பிற்கூவார்தும்மார்வழுக்கியு
மெங்குற்றுச்சேறிரோவென்றோமுன்புக்
கெதிர்முகமாநின்றுமுரையாரிருசாரவுங்
கொள்வர்குரவர்வலம்

(இ-ள்.) அறிவுடையோர் ஒருவர் எழுந்துபோகத் ... னாபின்னேநின்று அழையார் அப்போது தும்முவதுஞ்செய்யார் மறந்தும் எங்குப்போகின்றீரென்றுசொல்லார் முன்னேபுகுந்து எதிர்முகமாக நின்றும் ஒன்றைச்சொல்லார் அவர்க்கு இருமருங்கும்நின்றுசொல்வார் தம் குரவர்போகும்போது வலமாகப்போவார் என்பதாம், எ-று.

உடம்புநன்றென்றுரையாருந்தார்விளக்கு
மடுப்பினுட்டீநந்தக்கொள்ளாரதனைப்
படக்காயார்தம்மேற்குறித்து.

(இ-ள்.) பிறரைப்பார்த்து உடம்பு நன்றாயிருந்ததென்றுசொல்லார் க்கினையும் வாயால் ஊதி அவியார் அட்டில் அடுப்பின்கண் நெருப்பு அவியச் செய்யார் அந்தநெருப்பின்சுடரை தம்மீதுபடும்படி குளிர்நீங்கக்கருதிக்காயார் என்பதாம், எ-று. (நிடுக)

யாதொன்றுமேறார்செருப்புவெயின்மறையா
ரான்றவிந்தமூத்தவிழுமியார்தம்மோடு
கோராறுசெல்லும்டைத்து.

(இ-ள்.) கல்வி கேள்வி அறிவொழுக்கங்களால் நிறைந்தமைந்த தம்மி ம்மூத்தமேலோர் தம்முடனே ஒரு பிரயாணமாகச்செல்லுமிடத்து யாதொ றின்மேலும் ஏறிப்போகார் செருப்புத்தரியார், ஒன்றினால் பிறர்தம்மேல் வயில்மறைக்கப்போகார் எனபதாம், எ-று.

வான்முறையான்வந்தநான்மறையாளரை
மேன்முறைப்பாற்றங்குரவரைப்போலொழுக
னான்முறையாளர்துணிவு.

(இ-ள்.) பரிசுத்தமான்மரபில்வந்த நால்வேதமூர்த்திகளாகியவேதியரை லாகியமுறைத்தன்மையுடைய தம்குரவரைப்போலக்கொண்டு ஒழுகுதல் ல்முறையறிந்தவரதுதுணிவாம் என்பதாம் எ-று. வால்-பரிசுத்தம் (நிடுரு)

கால்வாய்த்தொழுவுசமயமெழுந்திருப்
பாகாரமென்பகுரவர்க்கிவையிவை
சாரத்தாற்சொல்லியமூன்று.

(இ-ள்.) காலின் கண் தொழுதலும் நன்றென்றசமையத்தின்கண் நிற்ற ம் அவரைக்கண்டால் எழுந்திருத்தலும் என்றுசொல்லப்பட்ட இவை குரவர் நச்செய்யும் ஆசாரம் என்றுசொல்லுவர் நல்லோர் இவைமூன்றுமே குரவர்க் ச்சொல்லிய ஆசாரம்பலவற்றுள்ளும் சிறந்தனவாகக்கொண்டு சொல்லப்பட் ன என்பதாம், எ-று. சாரம்-அசாரம். (நிடுச)

துறந்தாரைப்பேணலுநாணலுந்தாஙகற்ற
மறந்துங்குரவர்முற்சொலலாமைமூன்றுங்

(இ-ள்.) அருந்தவரைப்பாதுகாத்தலும் நாணுதலும் தாம் கற்றவற்றை பெரியோர்முன் மறந்தாயினுஞ்சொல்லாமையும் என இம்மூன்றுந்திறப்பட அறிந்தார் அறிந்த நெறி என்பதாம், எ-று. (ருஙரு)

பார்ப்பார்தவரேசுமந்தார்பிணிப்பட்டார்
மூத்தாரிளையார்பசுப்பெண்டிரென்றிவர்கட்
காற்றவழிவிலங்கினரேபிறப்பினுட்
போற்றியெனப்படுவார்.

(இ-ள்.) பார்ப்பாரும் தவசியரும் சுமந்தவரும் பிணிப்பட்டவரும் தம் மின்மூத்தவரும் பிள்ளைகளும் பசுக்களும் பெண்டிரும் என்றுசொல்லப்பட்ட இவர்களுக்கு மிகவும் வழிகொடுத்துவிலகிப்போனவரே தாம்பிறக்கும்பிறப்பு களுள் பிறரால் வணங்குதற்குரியார் என்றுசொல்லப்படுவோர் என்பதாம், எ-று. (ருஙசு)

ஈன்றாண்மகடன்னுடன்பிறந்தாளாயினுஞ்
சான்றோர்தமித்தாவுறையற்கவைம்புலனுந்
தாங்கற்கரிதாகலான.

(இ-ள்.) தாயோடாயினும் மகளோடாயினும் உடன்பிறந்தாளோடாயி னும் சான்றோர்தனிமையாக உறையாதொழு கஐம்புலன்களையும் தடுத்தற்கரி தாதலால் என்பதாம், எ-று. உறையாதொழிக என்றது வசிக்கலாகாது.(

கடைவிலக்கிற்காயாரகழ்கிழமைசெய்யார்
கொடையளிக்கட்பொச்சாவார்கோலநேர்செய்யா
ரிடையறுத்துப்போகிப்பிறனொருவற்சேரார்
கடைபோகவாழ்துமென்பார்.

(இ-ள்.) முன்போலப்பின்னும் கடைபோகவாழ்வோமென்று நினைப்ப வர் அரசர்வாயிலில்தடையுண்டானால் கோபித்துகாயார், அரசரோடுமிக்க உரி மையை அவர் பொறுக்காதவகையாகச்செய்யார் தமக்கு ஒன்றைக்கொடுக்குமி டத்தும் அவர்தம்மை தலையளிசெய்யுமிடத்தும் தமக்கு அவைபற்றாவென்று இகழார். அரசனைாநிகர்க்க அழகுசெய்துகொள்ளார், அரசிருந்தசபையின்கண் ணடறுததுப்போய்பிறனொருவனைச்சேர்ந்திரார் என்பதாம், எ-று. (ருஙஅ)

தமக்குற்றகட்டுரையுந்தம்மிற்பெரியா
ருரைத்ததற்குற்றவுரையுமஃதன்றிப்
பிறர்க்குற்றகட்டுரையுஞ்சொல்லற்கசொல்லின்
வடுக்குற்றமாகிவிடும்.

(இ-ள்.) தமக்குப்பொருத்தமான உறுதிச்சொற்களையும் தம்மினும்பெரியராக அரசனால் சிறப்புச்செய்யப்பட்டவர் சொல்லுதற்குப்பொருந்தின சொல்லியசொற்களையும் அதுவேயன்றி பிறர்க்கு உறுதியைத்தருகிற உறுதிச்சொற்களையும் அரசருக்குச்சொல்லற்க. சொல்லுவாராயின் தமக்குவடு உண்டாகுங் குற்றமாம் என்பதாம், எ-று. (௫௯)

பெரியாருவப்பன தாமுவவாரில்லஞ்
சிறியாரைக்கொண்டுபுகாஅ ரறிவறியாப
பிள்ளையேயானுமிழித்துரையார் தம்மோ
டளவளாவில்லாவிடத்து.

(இ-ள்.) பெரியோர் விரும்புவனவற்றை தாம் விரும்பார் தமவீட்டினை கீழ்மக்களை அழைத்துக்கொண்டுபோகார் தம்முடனே கலத்தல் இல்லாதவிடத்து அறிவினை அறியாத பிள்ளையேயாயினும் இழிவாகப்பேசார் என்பதாம், எ-று. (௬௰)

முனியுரர்துனியார்முகத்தெதிர்நில்லார்
தனிமையாடதுகடைங்கருமஞ்சொல்லா
ரினியவையாமறிதுமென்னார்சிலின்று
காக்கைவெள்ளென்னுமெனின்

(இ-ள்.) அரசன் செய்பவற்றை வெறுக்கமாட்டார் நேர்முகமாய் எதிர்நில்லார் அரசன் தனியாய் நின்ற இடத்திலே தம்காரியத்தைச்சொல்லார் இனிமையான பொருள்களை நாங்கள் அனுபவித்து அறிந்திருக்கின்றோம் என்று அரசர்க்குச்சொல்லார் காகம் வெண்மையாயிருக்குமென்று அரசன் சொன்னாலும் அவன் மேல் அன்பில்லாமல் வெறுத்துக்கொள்ளமாட்டார் என்பதாம், எ-று. (௬௧)

உமிவுமுயர்ந்துழியேறலும்பாக்கும்
வகையிலுரையும்வளர்ச்சியுமைந் துமப
புணரார்பெரியாரகதது.

(இ-ள்.) உமிதலும் உயர்ந்த இடத்தில் ஏறியிருத்தலும் பாக்குத்தின்னலும் தகுதியற்றவார்த்தையும் உறங்குதலும் ஆகிய இவ்வைந்தினையும் அரசர்முன்பு செய்யார் என்பதாம், எ-று. (௬௨)

இறைவர்முற்செல்வமுங்கல்வியுந்தேசுங்
குணனுங்குலமுடையார்கூறார் பகைவர்போற்
பாரித்துப்பல்காற்பயின்று.

(இ-ள்.) உயர்ந்த குடிப்பிறந்தார் தமக்குத் துன்பஞ்செய்யும் பகைவர் போல்விரித்து அரசர்க்கெதிரில் தமது செல்வத்தையும் கல்வியையும் தமது ஒ
[illegible]

பெரியார்மனையகத்துந்தேவகுலத்தும்,
வணங்கார்குரவரையுங்கண்டாலணங்கொடு
நேர்பெரியார்செல்லுமிடத்து.

(இ-ள்.) அரசர் மனையிலும் தேவாலயத்திலும் பெரியோரையாயினும் பார்த்தால்பணியமாட்டார் தெய்வங்கள் புறப்பட்டு உலாவருங்காலத்தும் அந்த அரசர்களை ஒத்த அரசர் புறப்பட்டு உலாவருங்காலத்தும் பார்த்தாலும் பணியார் என்பதாம், எ-று. அணங்கு என்பது தெய்வம் (கச)

நகையொடுகொட்டாவி
வினையும்பெரியார்முற்செயயார்செய்யி
னசையாதுநிற்கும்பழி.

(இ-ள்.) நகைத்தலோடு கொட்டாவியையும் காறியுமிழ்தலும் தும்முதலும் ஆகிய இவற்றையும் அரசர் முன்பு செய்யமாட்டார் செய்யின் நிலைபெறும் பழியானது தெய்வத்தைவிட்டு நீங்கபெயராது என்பதாம், எ-று. (கரு)

நின்றக்கானிற்கவடக்கத்தாலென்பது
மிருந்தக்காலெழாமையேகாற்பெருந்தக்கார்
சொல்லிற்செவிகொடுத்துக்கேட்டு...
வினவற்கசொல்லொழிந்தக்கால்.

(இ-ள்.) நன்மாணுக்கர் எந்நாளும் ஆசிரியர்முன் அடங்கி ஒழுகவேண்டுதலால் அவர்பாடஞ்சொல்லுதலை நிறுத்தினால் தாமும்நிற்கக்கடவர் அவர்முன் இருந்தபோது அவர் எழுந்துபோவென்று ஏவுதற்குமுன்னே எழுந்துபோகார் அவர்பாட முதலியவற்றைச்சொன்னால்காதுகொடுத்துகேட்டிடுக அவர்யாதொனறும் சொல்லாவிடின் மறுபடியும் தாமும் வினவாதிருக்கக்கடவர் என்பதாம், எ-று. (கசு)

உடுக்கையிகவார்செவிசொறண்டார்கைமேலெடுத்துரையார்பெண்டிர்மேனோக்கார்செவிச்சொல்லுங்
கொள்ளார்பெரியாரகத்து.

(இ-ள்.) பெரியோரது சபையில் ஆடையைக் களையார் காதைச்சொறியார் கையைமேலே தூக்கிப்பேசார் மாதர்களை நோக்கார் ... செவியில்ச்சொல்லும் சொல்லையும் கேளார் என்பதாம், எ-று.

விரைந்துரையார்மேன்மேலுரையாரபொய்யாய
பரந்துரையார்பாரித்துரையாரொருங்கெனைத்துஞ்
சில்லெழுத்தினாற்பொருள் ...க்கக்காலத்தாற்
சொல்லுகசெவ்வியறிந்து.

(இ-ள்) ஒருவரிடத்து ஒன்றைச் சொல்லும்பொழுது கடுகிப்பேசார் மேன்மேலும் பொய்யான சொற்களை விரைவாகப்பேசார் தாம் சொல்லும் சொற்களை விரிவாகச்சொல்லார் எல்லாவற்றையும் ஒன்றாக சிலஎழுத்துக்களாலேபொருள் விளங்கும்வகை காலத்தோடு சமையத்தையும் அறிந்து பேசுக என்பதாம், எ-று. (கூ0)

தம்மேனிநோக்கார்தலையுளரார்கைந்நொடியா
ரெம்மேனியாயினுநோக்காரதலைமகன்
றம்மேனியல்லாற்பிற.

(இ-ள்.) நற்குலப்பெண்டிர் தம்கணவருடைய உடம்பின் அழகையன்றி மற்றையாடவரது மேனிஎவ்வளவு அழகுடையனவாயினும் பாரார் தம் உடலின் அழகையும் நோக்கார் தலைமயிரைக்கோதார் கைநொடித்தல் முதலியற்றைசெய்யார் என்பதாம், எ-று. (கூக)

பிறரொருவரொடு மங்கிரங்கொள்ளாரிறைவனைச்
சாரார்செவமயாராரசாரிற்பிறிதொன்று
தேர்வார்போனிற்கதிரிந்து.

(இ-ள்.) அறிவுடையோர் பிறரோடுகூடஇருந்து ஒன்றனை மறைவாக ஆராயார் அரசனைச்சாரநில்லார் அரசன் பிறன்ஒருவனுக்குச்சொல்லும் சொல்லை மறைகாதாலுலக்கேளார் சமீபத்திலிருந்தால் வேறொன்றைஆராய்வார்போலமுகந்திரிந்துநிற்க என்பதாம், எ-று. (எ0)

துன்பத்துட்டுன்புற்றுவாழ்தலுமின்பத்து
ளின்பவகையானொழுகலு—மன்பிற்
செறப்பட்டாரில்லம்புகாமையிம்மூன்றுந்
திறப்பட்டார்கண்ணேயுள.

(இ-ள்.) துன்பம்அடையுங்காலத்தில் அத்துன்பத்தைபொறுத்துவாழ்தலும் இன்பகாலத்தில் பிறர்க்கு இன்பம்செய்யும்வகையால் இன்புற்றுநடத்தலும் அன்பினின்றும் வேறுபட்டவரதுவீட்டில் புகாமையும் ஆகியஇந்தமூன்றும் நல்வழிப்பட்டவரிடத்தே உள்ளவாம்என்பதாம், எ-று. (எக)

கைசுவைந்துதங்குரவர்பேருரையாரில்லத்
துறும்பிநெடிதுமிராஅர்பெரியாரை
யெனறுமுறைகொண்டுகூறார்புலையரையு
நன்கறிவார்கூறார்முறை.

(இ-ள்.) நன்மையை அறிவாராகியஅறிஞர் தாம்வெகுண்டாராயினும் குரவர்பெயரைச்சொல்லார் தம்வீட்டில் தம்மனையாளை மிகவும் காத்து நெடுநேரமும்வீட்டில்இரார் எந்நாளும் தம்மிற்பெரியாரை முறைப்பெயர்கொண்டு
முறை
-று.

புழைக்கடைப்புக்கா ரரசன்கோட்டியுளும
யிவற்றுக்கட்செல்வியார்நோக்காரேயவ்வத்
தொழிற்குரியரல்லாதவர்.

(இ-ள்.) அவ்வத்தொழிற்குரியர் அல்லாதவருள் நல்லோர் பிறர்வீட்டில் புழைக்கடைவாயில் வழியாக நுழையார் அரசன் கூட்டத்தோடுகூடிக்கூத்துமு தலியவற்றில் இன்புறுகின்றஇடம் மனைவியோடிருக்குமிடம் என்னும் இவ்வி டங்களில் பாரார்என்பதாம், எ-று.

வண்ணமகளிரிடத்தொடுதம்மிட
மொள்ளியமென்பாரிடங்கொள்ளார்தெள்ளி
மிகக்கிழமையுண்டெனினும்வேண்டாவேபெண்டிர்க்
குவப்பனவேறாய்விடும்.

(இ-ள்.) யாம் அறிவுடையோம் எனத் தம்மைக்கருதுவோர் கோலம் செய்யும் மகளிருடைய இடத்தொடு சேர்ந்த தம்மிடத்தை சிறந்த இடமாகக் கொள்ளார், தெளிவுற்று மிகுதியும் உரிமையுண்டாயிருப்பினும் தம்மனைவிய ரது மனவிருப்பம்வேறுபடும் என்பதாம், (எ-று.)

விரல்படச்செல்லார்நிழல்மிதித்துநில்லா
ருரையிடையாய்ந்துரையாரூர்முனிவசெய்யா
ரரசர்படையளவுஞ்சொல்லாரோயென்றுங்
கடைப்பாகவாழ்துமென்பார்.

(இ-ள்.) எந்நாளும் ஒருதன்மையராய் வாழ்வோமென்பவர் ஒருவர்பக்கத்தில் வரிசைப்படப்போகார், ஒருவருடைய நிழலைமிதித்துக்கொண்டு நில்லார், முன்னே ஆராய்ந்தன்றி பேசும்போது ஆராய்ந்துபேசார், ஊரிலுள்ளவர்கள் வெறுக்கத்தக்கவைகளைச் செய்யார், அரசரதுபடையினளவை பகைவருக்குச் சொல்லார் என்பதாம், எ-று.

அளையுறைபாம்பு மரசுநெருப்பு
முழையுறைசீயமுமென்றிவைநான்கு
மிளையவெளியபயின்றவென்றெண்ணி
யிகழினிழுக்கந்தரும்.

(இ-ள்.) புற்றில்வாழ்கின்ற பாம்பும் அரசனும் தீயும் குகையில்வாழ்கின்றசிங்கமும் என்று சொல்லப்பட்ட இந்நான்கினையும் இளையன என்றும் எளியன என்றும் பழகினவையென்றும் நினைத்து இகழ்ந்தால் அவை துன்பத் தைச்செய்வனவாம் என்பதாம், எ-று. (எசு)

அறத்தொடுகல்யாணமாள்வினைகூறா
இறப்பப்பெருகியக்கண்ணுந்—திறப்பட்டார்
மன்னரின்மேம்படச்செய்யற்கசெய்பவேன்
மன்னியசெல்வங்கெடும்.

(இ-ள்.) நெறிப்பட்டவராகிய அறிவுடையோர் செல்வத்தால் மிகவும் பெருக்கமடைந்தாராயினும் அறத்தினையும் கல்யாணத்தினையும் முயற்சியையும் வீட்டினையும் அரசரினும் மேற்படச்செய்யாதொழிக செய்வாராயின் தம்மிடத்தில் நிலைபெற்றிருக்கின்ற செல்வம் அழியும் என்பதாம் எ-று. (எஎ)

உண்டதுகேளார்குரவரைமிக்காரைக்
கண்டுழிக்கண்டாமந்திரியரற்புலையரையு
முண்டதுகேளார்விடல்.

(இ-ள்.) ஐங்குரவரையும் சான்றோரையும் கண்டபொழுதின்கண் அவரைவழிபட்டு ஒழுகவேண்டிய ஒழுக்கத்தில் மாறுபடார் அவர் உண்ட உணவைக்குறித்து வினவார் கீழ்மக்களையும் உண்ட உணவைக் குறித்து வினவாதொழிக என்பதாம, எ-று. ஐங்குரவர் என்பது இராசா, குரு, தமையன், பிதா, மாதா. ·· தாமம் என்பது வழக்கம். (எஅ)

கிடந்தாரைக்கால்கழுவார்பூப்பெய்யார்சாந்த
மறந்தாலுமெஞ்ஞான்றுமபூசார்கிடந்தார்க
[illegible]ச.

(இ-ள்.) எந்நாளும் அழகிய கட்டிலின்மேல் படுத்திருப்பவரது காலைக் கழுவார் அவருக்குப்பூச்சூட்டார் மறந்தாயினும் சந்தனம்பூசார் படுத்திருப்பவர்க்கு அருகில் நில்லார் என்பதாம், எ-று. (எகூ)

உதவிப்பயனுரையாருண்டிபழியா
ரறத்தொடுதானோற்றநோன்புவியவார்
திறத்துளிவாழ்துமென்பார்.

(இ-ள்) பெரியோருடைய ஒழுக்கத்தை நினைந்து அவ்வாறு வாழ்வோமென்றெண்ணுவோர் தாம் ஒருவருக்குச்செய்த நன்றியின்பயனைச்சொல்லார் தமக்கு ஒருவரிட்ட உணவை இகழ்ந்துரையார் தாம்செய்த அறத்தையும் நோற்ற நோன்பினையும் புகழ்ந்துரையார் என்பதாம் எ-று. (அ௰)

எய்தாதவேண்டார்இரங்காரிழந்ததற்குக்
கைவாராவந்தவிடுக்கண்மனமழுங்கார்
மெய்யாயகாட்சியவர்.

(இ-ள்.) உண்மையாகிய அறிவினையுடையார் தமக்குக் கிடைத்தற்கரிதானவற்றை விரும்பார் தம்மால் இகழப்பட்டவற்றிற்கு வருந்தார் தமக்குப் பழக்கமில்லாமல் சேர்ந்ததுன்பத்திற்கு மனம்கலங்கார் என்பதாம், எ-று. கைவாரல் என்பது பழக்கம். (அக)

தலைக்கிட்டபூமோவார்மோந்தபூச்சூடார்.
பசுக்கொடுப்பிற்பார்ப்பார்கைக்கொள்ளாரோயென்றும்
புலைகைக்கெச்சிலீட்டாரவ்விடல.

(இ-ள்.) எப்போதும் ஒருவர்தலையிற் சூடுவதற்கென்றெடுத்து வைத்த பூவை மோந்துபாரார் ஒருவர்மோந்துவைத்தபூவைத்தாம் சூடார், பார்ப்பார்பசுவைக்கொடுத்தால்அதனை வாங்கார் புலையர்க்கு எச்சிலைக் கொடார் ஆதலால் இவைகளை விடுக என்பதாம், எ-று. (அஉ)

மோட்டுடைப்போர்வையோடேக்கழுத்துக்காளசைப்பக்
காடெனினுமூரெனினும்பழித்தார்மரந்தம்மின
மூத்தவுளவாகலான்-

(இ-ள்.) காட்டினிடத்திலேயாயினும் மரங்களின்கீழேயாயினும் தம்மினும் மூத்தோர் உளராயிருப்பாராயின் அவர்க்கெதிரில் தமது மூடத்தனத்தால் தம்உடம்பின்மீது ஆடையைப்போர்த்திருத்தலும் இறுமாந்திருத்தலும் இரண்டுகால்களையும் அசைத்துக்கொண்டிருத்தலும் தகாதசெயல்களென்று பெரியோர் இகழ்ந்தார் என்பதாம், எ-று. மோட்டு என்பது மூடத்தன்மை. (அங)

நிலையினைந்தநற்கருமஞ்செய்யுங்காலென்றும
புலையாவாய்நாட்கேட்டுச்செய்யார—தொலைவில்லா
வந்தணாவாய்நாட்கேட்டுச்செய்கவவர்வாய்ச்சொ
லெனறும்பிழைப்பதில.

(இ-ள்.) அறிவுடையோர் நிலைபெற்றநல்லகாரியங்களைச்செய்யுமிடத்து எப்போதும் புலைரிடத்தில்நாள்வினவிச்செய்யமாட்டார் கெடுதியில்லாத அந்தணரிடத்தில் நாள்வினவிநல்லகாரியங்களைச்செய்க ஏனெனின் அவ்வந்தணர் வாய்ச்சொற்கள் எக்காலத்திலும் பிழைப்பது இலஎன்பதாம், எ-று. (அச)

மன்றத்துநின்றுஞற்றாமாசுகிமிர்ந்தியங்கா
ரொன்றுங்கடுஞ்சொலுரையாரிருவராய
நின்றுழியுஞ்சொல்லார்விடல.

(இ-ள்) அறிவுடையோர் பெரியோர்சபையில்நின்று யாதொருஅங்கச்சேட்டையும் செய்யார் குற்றத்தைத்தருவனவாகியவாசனைப்பண்டங்களைப்பூசிக்கொண்டுநடவார் எக்காலத்திலும்கடுஞ்சொற்களைச்சொல்லார் இருவராயிருந்துபேசுமிடத்திலும் தாம்பேசார் ஆதலால்இவற்றையாவரும்ஒழியக்கடவது என்பதாம், எ-று.

கைசுட்டிக்காட்டுரையாநாலாலெழுத்திடார்
மெய்சுட்டியில்லாரையுள்ளாரோடொப்புரையார்
கையிற்குரவர்கொடுப்பவிருந்தேலா [illegible]
ரையமில்காட்சியவர்.

(இ-ள்.) சந்தேகமில்லாதஅறிவினையுடையோர் பெரியோர்முன் கை யைச்சுட்டிக்காட்டிப்பேசார் காலினால்நிலம்கீறார் கல்விமுதலியவற்றையுடை யவரோடு அவைகளையுடையரல்லாரை மெய்யெனச்சாதித்து ஒப்பிட்டுக்கூறார் பெரியோர் கொடுப்பனவற்றை உட்காந்திருந்துவாங்கார்என்பதாம், எ-று. ()

தன்னுடம்புதாரமடைக்கலந்தன்னுயிர்க்கென்
றுன்னித்துவைத்தபொருளோடிவைநான்கும்
பொன்னினைப்போற்போற்றிக்காக்கவவ்வையாக்கா
லன்றேவழுமந்தரும்.

(இ-ள்.) தன்உடலும் மனைவியும் தன்னிடத்தில் அடைக்கலமாக ஒருவ ன்வைத்தபொருளும் தன்உயிர்க்குஉதவியாமென்று நினைத்துச்சேர்த்துவைத்த பொருளும் ஆகியஇந்தநான்கினையும் பொன்னைப்போலஒருவனகாதலதாழுகக டவன் அவ்வாறுஒழுகாதவிடத்து அப்போதேயிருந்ததுன்பத்தைத்தரும் என் பதாம், எ-று.

நந்தெறும்புதூக்கணம்புட்காக்கையென்றிவைபோற்
றங்கருமநல்லகடைப்பிடித்துத்தங்கரும
மப்பெற்றியாகமுயல்பவர்க்காசார
மெப்பெற்றியானும்படும்.

(இ-ள்.) ஆக்கமுள்ளஎறும்பும் தூக்கணமுறவையும் காக்கையும் என்று சொல்லப்பட்ட இவைகளின் செயல்போல நல்லனவாகிய தமதுகருமங்களைச் சோரறமற் கொண்டு அத்தன்மையாக முயல்பவர்களுக்கு இல்வாழ்கையின் ஒழுக்கம் எவ்வகையாலும் சிறப்படையும் என்பதாம், எ-று. (௧௮)

எறும்பானது கிடைக்காதகாலத்தில் உதவும்படி கிடைக்கின்ற காலத்தில் உணவைச்சேகரித்துக்கொள்ளும் தூக்கணம் பறவையானது குளிர் காற்று முதலியவற்றில் நின்றும் தன்னைக்காக்கும்படி கூடுகட்டிக்கொள்ளும் காக்கை யானது தன்இனத்தை அழைத்துஅவைகளோடுகூடித் தனக்குகிடைத்த உண வை உண்ணும் இவ்வாறுகஇவற்றின் செய்கையை அநுசரிப்பவர்க்கு இல் வாழ்க்கையின் ஒழுக்கம் சித்தியாகும் என்பதாம், எ-று.

தொழுதானும்வாய்புதைத்தானுமஃதன்றிப்
பெரியார்முன்யாதுமுரையார்வழியவர்
கண்ணுளேநோக்கியுரை.

(இ-ள்.) பெரியார்முன் யாதொன்றைச் சொல்லவேண்டின் வணங்கி நின்றாயினும் வாய்பொத்திநின்றாயினும் அவ்வாறுநின்றன்றி வேறுவகையாகப் பேசார் ஆதலால் நீஅவர்முன் பேசவேண்டிய நெறியை மனத்தில் ஆராய்ந்து பேசுவாயாக என்பதாம், எ-று. (௮௯)

சூதர்கழகமரவமறாக்களம்
பேதையர்களல்லார்புகாஅர்புகுபவே
லேதம்பலவுந்தரும்.

(இ-ள்) சூதாடுமிடத்தும் ஆரவாரம் நீங்காதஇடத்தும் அறிவிலிகளல்லாதார் போகார் போவாராயின் பலதுன்பங்களும் உண்டாகும் என்பதாம் எ-று. (௯௰)

ஊர்க்களத்தோட்டியும்பெண்டிர்கண்மேலு
நடுக்கற்றகாட்சியார்நோக்கார்கொடுத்திசையா
ரில்லம்புகாஅர்விடல.

(இ-ள்) சோர்வற்ற அறிவினையுடையவர் அரவாரஞ்செய்யாமற் கண்மடைப்பள்ளியிலும் பெண்கள்வசிக்குமிடத்தும் பாரார் [illegible] பிறர்வீட்டினுள்ளே பிரவேசியார் ஆதலால் நீஇவற்றைவிலக்குகவென்பதாம், (எ-று.) (௯௧)

அறியாததேயத்தானாதுலனைமூத்தா
னிளையானுயிரிழந்தானஞ்சினானுண்டா
னரசர்தொழிறலைவைத்தான்மணாளனென்
றென்பதினையாகண்டாருக்குங்காலாறரவு
மாசாரமில்லிபெறார்.

(இ-ள்.) அறியாததேசத்தையுடையவன் வறியன் மூத்தோன் சிறுவன் உயிரிழந்தவன் பயந்தோன் போசனப்பிரியன் அரசர்தொழில்தலைவைத்தவன் மணமகன் என்னுமிவ்வொன்பதின்மரும் ஆசாரமில்லாதவராவார் என்பதாம், எ-று.

அறியாததேயத்தானென்றது புண்ணியபூமியென்றெடுக்கப்பட்ட ஆரியவர்த்தமொழிந்தபிறநாட்டானையேயாம் ஆரியவர்த்தம் என்பது வடக்கே இமையமலையையும் தெற்கே பொதிகைமலையையும் மேற்கே மேற்கடலையும் கிழக்கே கீழ்க்கடலையும் எல்லையாகவுடையதேயங்களாம் இந்தஆரியவர்த்தமொழிந்ததேசத்தாருடைய ஆசாரங்கள் சதாசாரமாகக்கொள்ளப்படாமையால்அறியாததேயத்தானும் கொடிதுகொடிது வறுமைகொடிது என்றபடிவறுமை ஆசாரமிழக்கச்

செய்யும் ஆதலால் ஆதுலனும், கிழவர்களும் சிறுவர்களும் ஆசாரத்தை அநுஷ்டிக்கும் வலியிலராகையால் மூத்தானும் இளையானும் உயிர்நீங்கியபின் உடல் ஆசாரமுதலியவற்றை அறியாதாதலால் உயிரிழந்த சரீரத்தானும், பயந்தவன் ஆசாரத்தைக்கைக்கொள்ளான் ஆதலால் அவனும் உணவையே பெரிதாகநினைப்பவன் பசிபொறான் ஆதலால் உண்பானும், அரசர்கள் தொழிலைச்செய்யமேற்கொண்டவர்கள் அத்தொழிலின் நிர்ப்பந்தத்தால் ஆசாரம் தவறக்கூடும் ஆதலால் அவர்களும் மணமகன் கலியாணக்களிப்பால் ஆசாரநிர்ப்பந்தத்தைக்கவனியான் ஆதலால் அவனும் ஆகிய ஒன்பதின்மரும் ஆசாரம்நீங்கப்பட்டவரென்று சொல்லப்பட்டார். என்பதாம்.

தேவர்வழிபாடு தீக்கனா வாலாமை
யுண்டது கான்றல் மயிர்களைதல் ஊண்பொழுது
வைகுதுயிலோடு பிணைவிழைச்சுக் கீழ்மக்கள்
மெய்யுறல் ஏனையிறந்து
வையுறாரோடுகநீர்.

(இ-ள்.) தேவாலயங்களுக்குச் செல்லல் தீங்கைத்தருனைவாகிய சொப்பனம் அசுத்தசம்பந்தம், உண்ட அன்னத்தை வாந்தி பண்ணுதல் க்ஷௌரஞ்செய்துகொள்ளல், அன்னம் உண்ணும் காலம் நித்திரைசெய்தல், மனைவியோடு சங்கமம்பண்ணுதல், புலையர்கள் சரீரசம்பந்தம் ஆகிய இப்பத்துவிதத்தும் சிறிதேனும் சந்தேகமில்லாது நீராடக்கடவர் என்பதாம், எ-று. 'வாலாமை என்பது அசுத்தம்.'

ஆசாரக்கோவை முற்றிற்று.

# சரஸ்வதி அம்பிகை பஞ்சரத்னம

இஃது

பழநாபுரி

## மாம்பழக்கவிச்சிங்கநாவலரால்

## இயற்றியது:

சீர்கொண்டசெய்பொற்சிலம்பிசைததும்புநறுசீததளவனசபாத
தெரிசனமெனக்கனுதினங்கொடுத்தெண்ணியவைசித்தியாம்படிமுடித்துக்
கார்கொண்டகனபருவகாலமுகில்போலமுநீர்கவிதைமழைதடைபடாமற்
கனிவினொடுபொழியவென்வாக்கினிற்குடிவந்துகருணைபுரிதல்வேண்டும்
பார்கொண்டசிவபரிபாலனகுணலப்ரபாகராணந்தவடிவே
பலதேவகணவினுதபடிகாத்ஞபராணபரிமளவிநோதவமுதே
நார்கொண்டவடியர்மனநடனமயிலேபிரமனுவீற்றிருந்தகுயிலே
நாதசப்தவேணிவேதபத்தகபாணி ஞானமுத்தமிழ்வாணியே.

அன்னைநின்கருணைகடாக்ஷமெனியேற்கோரணுத்துணையிடைத்திருந்தும்
அதுகொண்டுனைப்பாடியானந்தமடையாமலந்தோவயர்ந்துவீணே
சன்னையொன்றறியாதசருவசங்கடலோபசண்டாளனாத்துதித்துச்
சரசமதுரப்ரபந்தங்களையிறைத்துத்தரித்திரத்துழல்வதழகோ
வென்னையிங்கிப்படியிடர்க்கடல்புகுத்திடாதீடேற்றியருளல்வேண்டும்
இனிநீபராமுகஞ்செய்யத்தகாதுபுகலிலையெனக்குன்னையன்றி
தன்னயந்தருதவளநளினமண்டபகனகநவரத்னமயபூஷணி
நாதசப்தவேணிவேதபுத்தகபாணிஞானமுத்தமிழ்வாணியே.

சம்பந்தரப்பர்சுந்தரரருணகிரியார்தழைக்குநக்கீரதேவர்
சாதமாணிக்கவாசகர்சிவப்பிரகாசர்சார்ந்தசிவஞானமூர்த்தி
கும்பர்தமிக்கமுச்சங்கநன்னுவலர்குலாவுபொய்யாமொழிமுதற்
கோதிலாவாணர்களெலோருநின்னருள்சிறிதுகூடியன்றோவுயர்ந்தார்
வெம்பந்தபவரிதநீயென்றனைலதுவேறென்றினைலெய்துமோ
மெய்யானதெய்வநீயாதலாலெனையிந்தவேளையீடேற்றல்வேண்டும்
நம்பர்நருணிவர்மனதீபமேயெவ்வுலகுநல்குபேரின்பவாழ்வே
நாதசப்தவேணிவேதபுத்தகபாணிஞானமுத்தமிழ்வாணியே

ரஸ்வதிஅம்பிகைபஞ்சரத்தினம்.

விஜீமகவிதண்டிகட்டுரைப்பட்டுமூர்த்தி
ஏமேகஞ்சொற்கனிந்தவொட்டக்கூத்தனென்
நமிவரனைவருமுனைப்போற்றியல்லவோமகிமைபெற்றார்
தமியேனையுந்தொண்டுகொண்டுகாத்தருளவிதுசமையமம்மே
ளியோடிருந்தறவாளுறைபுகக்கெண்டைவாவிநீரூடொளிப்ப
மான்பிணைவனந்தோறுமறையப்பொலிந்துசெவ்வரிபடருநயனதருண
நாளிலோர்நாளுமறவாதுதொழுவாரிதயகளினமேவியவன்னமே
நாதசட்பதவேணிவேதபுத்தகபாணிஞானமுத்தமிழ்வாணியே.

அகவிருளறப்பெற்றரும்பொருளனைத்தையுமறிந்துநன்றிதுதீதென்
றனுதினமதித்துநித்யாநித்யசாதனமடுத்துவீடடைவதற்குத்
திகழுனதுகட்கருணைசிறிதேனுமின்றியெத்தேவராலுங்கூடுமோ
திறமாகவென்வாக்கினிற்குடியிருந்துபலசித்தியுந்தந்துகாப்பாய்
சுகவிமலசிற்பரஞ்சோதியேபேரின்பசுத்தசைதன்யவாழ்வே
சுமுகசந்ரோதயசுலட்சணசுமங்களசுசீலசுந்திரசொரூப
பெருவகற்பூரகுங்குமபடீரநன்னயபயோதரரத்னமே
ாதசட்பதவேணிவேதபுத்தகபாணிஞானமுத்தமிழ்வாணியே

சரஸ்வதி அம்பிகை பஞ்சரத்தினம்,

முற்றிற்று.

இப்புத்தகம், சாலிவாகன சகாப்தம் ௲௮௱௨௰௧ கலியுகாப்தம் ௫௲ ௲த மேல் செல்லாநின்ற விகாரிஷூ ஆவணிமீ ௨௰௨ சோமவாரம் சஷ்டி ௰௬ நா ழிகை அனுசம் ௫௰௬ நாழிகை திவி ௭௰-க்குமேல் அமிர்தகெடிகை இக் ...யோக சுபதினத்தில் சூரியவுதையம் சிம்மலக்கினத்தில தஞ்சை ஸ்ரீ ருஷ்ணவிலாச அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது.

## இதற்குமுன் அச்சிட்டபுத்தகங்களாவன.

திருவிளையாடற்புராணம்
திருப்பரங்கிரிப்புராணம்
...மூலமும் உரையும்
முதுமொழிக்காஞ்சி மூலமும் உரையும்
மதுரைப்பதிற்றுப்பத்தந்தாதி.
திருவிளையாடற்போற்றிக்கலிவெண்பா.

,ர்.
கா.
கனி.
பார்வெ
பலே
கார்
க.

| | | | |
|---|---|---|---|
| ௧ | ௯ | என்பது | என்பதும். |
| ௭ | ௨௰௯ | பிணியால்த்துன்பம் | பிணியால் துன் |
| ௮ | ௨௰௧ | கால் | கால். |
| ௧ | ௰௧ | ஒழுக்கத்தில்த் | ஒழுக்கத்தில். |
| ௧ | ௨௰௧ | தோன்று | தொன்று. |
| ௰ | ௧ | வை யினுறும் | வகையினுறும். |
| ௰௧ | ௨௰௭ | பழய | பழைய. |
| ௰௪ | ௧ | விரும்வுவோர் | விரும்புவோர். |
| ஷை | ஷை | இறகாலே | இறகாலே. |
| ௰௧ | ௰௮ | காட்டில்த் | காட்டில். |
| ஷை | ௨௰௯ | உளரில்லாத | வளரில்லாத. |
| ஷை | ௨௰௧ | பழய | பழைய. |
| ஷை | ௯௰௪ | போகின்றீரேன்று | போகின்றீரென் |
| ௨௰ | ௨௰௮ | செவியில்ச் | செவியில். |
| ௨௰௧ | ௰௮ | காதினுல்க் | காதினுல். |
| ஷை | ௯௰௪ | விட்டில் | வீட்டில். |
| ௨௰௪ | ௯ | புலையக்குக்கு | புலையருக்கு. |
| ஷை | ௰௧ | காட்டிலிடத்திலேயாயி வைம் | [illegible] வைம். |